www.tamilarangam.net

# விடுதலையின் கைதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடபகுதியில் அரசியல் கைதிகள்

இன்று சிறீலங்கா அரசின் வசமுள்ள தமிழ்க் கைதிகளைவிட, வட-பகுதியில் புலிகளின் நில அறைச் சிறைகளில் அடைபட்டிருக்கும் தமிழ்க் கைதிகளே அதிக தொகையினராகும்.அரசின் அடக்கு முறையை எதிர்த்தெழுந்த தமிழ்ப் போராட்டத்தின் கவலைக்கும் நகைப்பிற்கு முரிய அவல நிலையே இது.

சிறீலங்கா அரசானது புலிகளைவிட மனிதாபிமானது என்பது இதன் அர்த்தமல்ல. அதைவிட எமது போராட்டம் எவ்வளவு தூரம் சீரழிந்த நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

பின்னணி

சமாதானப் படையாக வந்து பின்னர் புலிகளுக்கெதிராகச் சண்டை போட்ட இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர்,வடபகுதி புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்தது. இந்திய இராணுவம் எம் மண்ணை விட்டு வெளியேறும் போது பலத்த சேதத்தையும்,மனித அழிவுகளையும், பாரிய மனிதஉரிமை மீறல்களையும் ஏற்படுத்தி அதன் விளைவுகளை எம்மிடம் விட்டுச்சென்றது.

போராட்டத்தின் ஆரம்ப காலகட்டங்களில் பல்வேறு குழுக்களுக் கிடையேயான மோதல்களின் விளைவாய் பல கொலைகளும், பொதுஇடங்களில் மரணதண்டனைகள் நிறைவேற்றுதலும் இடம் பெற்றன. ஆயினும் தற்சமயம் ஆட்சியிலுள்ள அரசிற்கும் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைக் காலகட்டமான 1990 ஆம் ஆண்டுப் பகுதியில் புலிகள் மக்களைப் பற்றிய எந்தவிதமான அக்கறையுமற்று மனிதாபிமானமின்றி தமது எதிரிகளையும். சாதாரணமக்களையும் அழிப்பதற்கும் சித்திரவதை செய்வதற்கும் சிறையிலடைப்பதற்கும் சிறீலங்கா அரசு பச்சைக் கொடிகாட்டியது.

சிக்கல் மிகுந்ததும், கவனமாக கையாள வேண்டியதுமான எமது இனப்பிரச்சனை பற்றி எமது இனத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் ஆதிக்கம் கொண்டிருக்கும் புலிகளுடன் பேச்சு வார்த்தை வைக்க வேண்டியது அவசியம் தான். ஆனால் சிறீலங்கா அரசானது புலிகளின் சனநாயக விரோத நடவடிக்கைகள் அனைத்திற்கும் ஆதரவு வழங்கியது மட்டுமல்ல,அவற்றை மூடிமறைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டது. இது சிறீலங்காவின் அரசியலமைப்பும் முக்கியமாக தற்போது பதவியிலிருக்கும் அரசினது அரசியலும் எவ்வளவு சீரழிந்து போயிருக்கின்றன,என்பதையே எமக்குக் காட்டுகிறது. பேச்சுவார்த்தைக் காலகட்டத்தின் போது புலிகள் தமது முழுச்சக்தியையும் மக்களை வயது வித்தியாசமின்றி வேட்டையாடுவதிலேயே கழித்தனர். இந்திய இராணுவத்துடனோ அல்லதுவேறு அமைப்புகளுடனோ தொடர்பு வைத்திருக்கின்றனர் என்ற மேலெழுந்தவாரியான குற்றச்சாட்டின் பேரில் பலர் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். புலிகள் சிறீலங்கா அரசபடைகளின் முகாம்களுக்கருகில் தமது சோதனைச் சாவடிகளை(check point)நிறுவி பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் பலரைக் கைது செய்து கொண்டு போயிருக்கின்றனர். அது மட்டுமல்ல கொழும்பில் கூட அரச படைகளுடன் கைகோர்த்துக் கொண்டு தமது எதிரிகளை கைது செய்தனர். சனநாயகம் மனிதஉரிமை பொதுமக்களின் அபிலாசைகள் போன்றவை பற்றிய எந்தவித பொது உடன்பாடுகளும் இப்பேச்சுவார் த்தைகளின் போது புலிகளிடமோ அரசிடமோ ஏற்படவில்லை தமிழனோ,சிங்களவனோ யாராயிருப்பினும் பொதுமக்களைப் பற்றிய அக்கறை இவர்களிடம் இருக்கவில்லை. தமது கட்டுப்பாட்டிலிருக்கும் வடபகுதியில் புலிகளும் ஓர் அரசைப்போல் மக்களைக் கைது செய்தும் சிறையிலடைத்தும் வருகிறார்கள்.

ஒரு புறமாக புலிகள் ஓர் அரசு என்பதன் வரைவிலக்கணத்திற்குள் அடங்கக்கூடிய தரம் கொண்டிருக்கவில்லை. எனவே சமீபகாலம் வரைக்கும் சர்வதேச அமைப்புகள் எவற்றிற்கும் தமது நடவடிக்கைகள் சம்பந்தமாக பதில் சொல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை. மறுபுறமாக தமது மேலாதிக்கத்தை நிலை நாட்ட புலிகள் மக்களின் மேல் கட்டவிழ்த்து விட்ட பீதியும்,பயங்கரவாதமும் மக்களைப் பலமற்றவர்களாக்கி அவர்களை மௌனமாக்கியது. நேரடியாகவும் மறைமுகமாகவும் எமது பிரச்சனைகளில் தலையிட்டு இந்த வளர்ச்சிப் போக்கை மேலும் தூண்டிவிட்ட இந்தியஅரசுக்கு எமது வந்தனங்கள். அனைத்து ஆயுதக்குழுக்களும் பிற்கால கட்டத்தில் முக்கியமாக புலிகளும் தமது சொந்த மக்களுக்கே பதில் சொல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை.

ஒரு குடும்பத்தின் உறுப்பினரொருவர் வேறு அமைப்புடன் தொடர்பு கொண்டிருந்தார், என்ற குற்றச்சாட்டின் பேரில் முழுக்குடும்பமுமே புலிகளுக்கு பலியாகிய சம்பவங்களும் நடந்திருக்கின்றன. ஆரம்ப

காலங்களில் வேறு இயக்கங்களுடன் தொடர்பு வைத்திருந்தமைக்காக முழுக்குடும்பத்தையுமே புலிகள் கைது செய்து கொண்டு போன சம்பவங்கள் சிலகிராமங்களில் நிகழ்ந்து இருக்கின்றன. அக்குடும்பங்களின் கதி என்னவாயிற்று என்பது எவருக்கும் தெரியாது.

www.tamilarangam.net

**சிறையில் அடைபட்டவர்களின் வகைகள்:**

1.ஒரு கால கட்டத்தில் பல்வேறு குழுக்களில் அங்கத்தவராக இருந்து வந்தவர்கள்
2.ஏதாவது ஒரு குழுவுடன் தொடர்பு கொண்டிருந்தார் எனும் சந்தேகத்துக்குரியவர்
3.இந்திய ராணுவத்துடனோ அன்றி மற்றைய தாபனங்களுடன் சில தொடர்பு வைத்திருந்த தனிப்பட்ட நபர்கள்
4.புலிகளின் தலைமைப்பீடத்துடன் முரண்பாடு கொண்டு விலகிய புலிகளின் உறுப்பினர்கள்
5.புலிகளின் அராஜக நடவடிக்கைகளை விமர்சித்து அதன்மூலம் மற்றவர்கள் மேல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமை கொண்ட தனிப்பட்ட நபர்கள் (உதாரணமாக பல்கலைக்கழக மாணவர்கள்)
5.புலிகளால் கைப்பற்றப்பட்ட சிங்கள இராணுவத்தினரும் பொலிசாரும்(செஞ்சிலுவைச்சங்கம் புலிகளுடன்பேசி சிங்கள இராணுவம்,பொலிசாரின் உறவினர்கள் அவர்களை பார்வை இடக்கூடிய நிலையையாவது ஏற்படுத்தியுள்ளது).

சமீபத்தில் புலிகளை விட்டு வெளியேற விரும்பிய புலி அங்கத்தவர்களும் சிறையில் அடைக்கப்பட்டு கடின உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**கைதிகளின் கையறு நிலை:-**

புலிகளின் பல்வேறு சிறைமுகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் இந்தக்கைதிகள் நடாத்தப்படும் முறை மிகவும் கொடூரமானது. பல்வேறு சித்திரவதைகளை கிரமமாக இக்கைதிகள் அனுபவிக்கிறார்கள். பலர் சித்திரவதையின் போதே கொல்லப்பட்டிருக்கிறார்கள். கைதிகளில் பெரும்பாலோனோர் இரும்புச்சங்கிலியால் ஒன்றாகப்பிணைக்கப்பட்டு புலிகளின் நிலவறைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்(AMNESTY INT.REPORT)
கொடூரத்திற்கு பெயர்போன, புலிகளின் துணுக்காய் சிறைமுகாமில் மட்டும் 3000 இற்கும் மேற்பட்ட கைதிகள் ஒருமுறை இருந்தனர்.



இம்முகாம்களிலிருந்து ஒரு சில கைதிகள் தப்பி வந்திருக்கின்றனர். தமது குடும்பங்களை புலிகள் அழித்து விடக்கூடும் என அஞ்சி இத்தப்பி வந்த கைதிகள் இம்முகாம்களில் நடக்கும் அராஜகங்களை வெளியே சொல்லப் பயப்படுகிறார்கள். கச்சாய், சாவகச்சேரி, நல்லூர்,நீர்வேலி போன்ற இன்றும் பல இடங்களில் புலிகளின் சிறை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு நபர் புலிகளால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டால் அவரைப் பார்க்க எவருக்கும் அனுமதியில்லை. புலிகளின் அதிகாரிகள் சிலர், கைது செய்யப்பட்டவரின் உறவினர்கள் கேட்டால் "ஆள் முடிந்து விட்டார், இனி திரும்பி வரமாட்டார்" என வெகு சாதாரணமாகப் பதில் தருவர். இன்னும் சில அதிகாரிகள் அவ்வுறவினர்களிடம் ஆள் இருக்கிறார் என்பதுபோன்ற நம்பிக்கையை ஊட்டுவர். இதுவே புலிகளின் வழக்கமாகி விட்டதால் அந்த உறவினர்களை மேலும் துன்புறுத்தும் நோக்கில் தொடரப்படும் இன்னொரு வகைச் சித்திரவதையாகவே மக்கள் இதனைக் கருதுகின்றனர். எனவே இவ்வாறான பதில்களினால் தங்களது அன்புக்குரியவர்களை விடுமாறு கெஞ்சி அக்கைதிகளின் நெருங்கிய உறவினர்கள் புலிகளின் முகாம்கள் முன் தவமிருப்பது தவிர்க்கமுடியாததாகி தொடர்கிறது. சிறிலங்கா அரசின் விமானத் தாக்குதல்களின் போது இக்கைதிகள் கொல்லப்படட்டும் என்ற நோக்குடன் அவர்களை நிராதரவாக நிற்கவிட்டு புலிகள் சென்றுள்ளனர்.(இணைப்பைப் பார்க்கவும்)

புலிகளின் சிறைமுகாம்களில் அடைபட்டுள்ள கைதிகளின் சரியான எண்ணிக்கை எவ்வளவு என்பது தெரியவில்லை. ஆனால் பல்வேறு தொடர்புகளிலிருந்து கிடைத்த தகவல்களின் படி குறைந்தது 5000 பேராவது இருக்குமென மதிக்கப்படுகிறது. அனைத்து சிவில் நிர்வாகங்களும் சீர்குலைக்கப்பட்டு, பீதியால் பாதிக்கப்பட்ட நிலையில் வாழும் மக்கள் நிறைந்த வடபகுதியில் இருந்து கைதிகளின் சரியான எண்ணிக்கையை எடுப்பது கடினமான காரியம். எமது சமுகத்தின் உள்ளிருந்தோ, புறமிருந்தோ மனிதாபிமானத்திற்காக எழும் குரல்களை புலிகள் மதிக்கப் போவதில்லை; செவிசாய்க்கப் போவதுமில்லை. இவ்வுண்மையை உணர்ந்து விழிப்புணர்வு பெறும் சர்வதேச சமுகம் மட்டுமே இப் பேரழிவுகளிலிருந்து எம்மைக் காக்கும் சக்தி கொண்டிருக்கிறது. எனவே இந்த அட்டூழியங்களுக்கு எதிராக , குரல் கொடுக்கவேண்டியது சர்வதேச சமுகத்தின் உடனடிக் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாங்கள் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகளை மூடிமறைப்பதற்காக சிறிலங்கா அரசும் தமிழ் மக்களின் இன்றைய நிலையை எண்ணி மனம் வருந்துவதாக முதலைக் கண்ணீர் விடும். ஆனல் மக்களின் கீழான உணர்ச்சிகளை கிளறிவிடுவதையும், பயங்கரவாதத்தையும் மட்டுமே மூலதனமாக நம்பி தமது கட்டுப்பாட்டை நிறுவி வரும் புலிகளின் உண்மைச் சொரூபத்தை இதன்மூலம் மறைக்க முடியாது. வெறும் தர்க்க வாதத்தை விடுத்து, ஒட்டு மொத்தமாக எமது மக்களுக்கு என்ன நடக்கிறது என்ற ஒரு முழுமையான பார்வை எமக்கு அவசியம். மக்களைப் பலவீனப்படுத்தி அவர்களை ஆட்டு மந்தைகள் போல் நடாத்தி வெறும் பலிக்கடாக்களாகப் பயன்படுத்தும் அரசியலை"விடுதலை அரசியல்" எனக்கூறமுடியாது. இவ்வாறன அரசியலைத் தன்அமைப்புகளினூடாக நடைமுறைப்படுத்தி மக்கள் மேல் அதிகாரத்தை நிலைநாட்டிவரும் இயக்கத்தை, மக்களின் உண்மைப் பிரதிநிதிகள் என்று ஏற்றுக் கொள்ளவும் முடியாது. இவ்வாறு கூறுதுவது தமிழ் சமுகம் முழுவதையும் அவமதித்தலுக்கு ஒப்பாகும்.

எனவே தமிழ் மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள எவரும்- அது வெளிநாட்டுத் தமிழராய் இருக்கட்டும் ,அன்றி சர்வதேச சமுகமாயிருக்கட்டும்; ஏற்கனவே சீரழிந்து போய்விட்ட எமது போராட்டத்தைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையும், மீளாய்வும் மேற்கொள்ளல் அவசியம். இரத்தம் தோய்ந்த இந்த வரலாற்றிலிருந்து தமிழ் சமுகத்தைக் காப்பாற்றும் ஒவ்வொரு நடவடிக்கையையும் இவர்கள் எடுக்க வேண்டும். விடுதலையின் பேரால் புலிகள் இழைத்து வரும் அராஜகங்களையும் கொடுமைகளையும் அடாவடித்தனமாக நியாயப்படுத்துவதை வெளிநாட்டில் வாழும் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு பிரிவினர் தீவிரமாக செய்து வருகின்றனர். சர்வதேச சமுகத்தைச் சேர்ந்த நல்லெண்ணம் கொண்டோர் சிலரும் இவ்வாறன பொய்ப் பிரசாரங்களுள் எடுபட்டு, தற்போது மக்களுக்கும் அமைப்புகளுக்கும் உள்ள வேறுபாடுகளைப் பிரித்தறிய முடியாமல் இருப்பது கவலைக்குரியவிடயமே.

பொது இடங்களில் மரண தண்டனை நிறைவேற்றும் படலம் சமீபகாலமாக வடபகுதியின் பல்வேறு இடங்களில் புலிகளால் நடாத்தப்பட்டது. வழமையான பாணியை விட புதுவிதமாக இதனைப் புலிகள் செய்தனர்.குற்றச்சாட்டப்பட்டவர் கண்கள் கட்டியபடி புலிகளின் ஜீப்பில் இருந்து இறக்கப்படுவார். அவரை தனது



குற்றங்களை ஒப்புதல் அளிக்க கட்டளை இடுவர். 2,3 நிமிட ஒப்புதல் வாக்குமூலத்தின் பின் அவரது தலையில் துப்பாக்கியால் சுட்டுக்கொல்வார்கள்.பின்னர் அவரது உடலை, தமது ஜீப்பில் ஏற்றிக்கொண்டு செல்வார்கள். குற்றஞ் சாட்டப்பட்டவரின் கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருப்பதாலும் இன்னொரிடத்திலிருந்து கொணரப்படுவதாலும் அந்நபரை யாரென்று மக்களால் அடையாளம் காண சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. தண்டனை நிறைவேற்றுபவர்களும் அவரது குற்றப்பத்திரிகையை மக்கள் முன் வாசிப்பதில்லை. இவ்வாறன செயல்களின் முழுநோக்கமும் மக்களைப் பீதியில் தொடாந்து வைத்திருப்பதற்கும் கைதிகளின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைப்பதற்கும் ஆன நடவடிக்கைகளே அன்றி வேறொன்றுமில்லை. இச்சம்பவங்களை நேரடியாகப் பார்த்தவர்களின் தகவல்களின்படி இக் கொலைகளுக்குப் பலியானவர்கள் தலைமயிர் மொட்டையடிக்கப்பட்டு முகங்கள் வெளிறிப்போய் நீண்டகாலம் சிறையுள் அடைக்கப்பட்டோராகக் காணப்பட்டனர்.

குறைந்தபட்ச மனித விழுமியங்களையாவது புலிகள் மதிக்குமாறு அவர்களை நாம் வற்புறுத்தாவிடின் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படும் துர்நிகழ்வு ஒன்றிற்கு நாம் தள்ளப்படும் அபாயம் எம்மைச் சூழ்ந்துள்ளது.

## உடனடியான கோரிக்கைகள்-

1.கைது செய்யப்பட்டிருக்கும் சகலரது பெயர் விபரங்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளி.
2. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கைதிகளைப் பார்வையிட அனுமதி வழங்கு.
3. கைதிகளை சித்திரவதை செய்வதை நிறுத்து.

கைதிகளின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு ஆன மிகக் குறைந்த கோரிக்கைகளே இவை. கைதிகளை விடுவிக்க கோருவதே தலையாய கோரிக்கையாயிருக்க வேண்டியிருப்பினும் இக்குறைந்தபட்ச கோரிக்கைகளுக்காவது புலிகள் தலை சாய்க்க வற்புறுத்தி , மனிதாபிமானத்துடன் அவர்களை நடக்கவைக்க வெளிநாட்டில் இருக்கும் சகல புலி அலுவலகங்களுக்கும் இக்கோரிக்கைகள் அனுப்பப்பட வேண்டும் என நாம் கோருகிறோம்.

www.tamilarangam.net

**வடபகுதியில் புலிகளின் சிறையிலிருந்து தப்பிய ஒரு கைதியின் அனுபவங்கள்.**

நான் தமிழீழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ)அங்கத்தவனாயிருந்தேன். தனிப்பட்ட காரணங்களுக்காக,இந்தியராணுவம் இலங்கையில் இருந்த வேளையில் நான் அமைப்பை விட்டு வெளியேறினேன். அதன் பின் எனது தனிப்பட்ட வாழ்க்கையை நடாத்துவதற்காக ஒரு வான்(van) ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு சீவியம் நடத்தி வந்தேன்.

அன்று 1990 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி என்று நினைக்கிறேன். நான் யாழ் . பிளவுஸ் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது ஆயுதம் தாங்கிய இரு இளைஞர்கள் என்னை நோக்கி வந்தனர்."பொன் மாஸ்டர் (உள்ளூர் புலி பொறுப்பாளர்)உன்னை சந்திக்க வேண்டுமாம்" என்று கூறி என்னை அழைத்துச் சென்றனர்.நான் பொன் மாஸ்டரின் முகாமில் விடப்பட்டேன்.
ஆரியகுளம் சந்தியில் நின்ற எனது வானையும் அவர்கள் எடுத்து வந்தனர். நான் சென்ற நேரம் பொன்மாஸ்டர் அங்கு இருக்கவில்லை. முதல் நாள்தான் வவுனியாவில் இரு ந்து புறப்பட்டு இரவிரவாக வானில் வந்தேன்.இதனால் எனக்கு நித்திரை கொள்ளவேண்டும்போல் இருந்தது. என்னை எனது வானில் படுக்கவிடும்படி கேட்டேன். அனுமதித்தார்கள். படுத்தேன்.

மாலை 5 மணியளவில் என்னைத் தட்டி எழுப்பினார்கள். பொன்மாஸ்டர் வந்திருப்பதாகவும் என்னைப் பார்க்கப்போவதாகவும் கூறினர்.நான் பொன்மாஸ்டரை சந்தித்தபோது வேறுயாரோ ஒருவர் என்னை சந்திக்க வருவதாகவும் ஓரமாக இருக்கும் படியும் கூறினார். இரவு7மணிவரை எவரும் வரவில்லை.என்னை வீட்டுக்குப் போகவிடுங்கள்,நாளை காலை நான் திரும்ப வருகிறேன் என்று கேட்டேன்.அவர்கள் மறுத்து விட்டனர்.இரவு 9 மணிக்கு அறையொன்றுள் படுக்க விட்டனர்.இரவு 11 மணிக்கு சாப்பிட ஏதோ தந்தனர்.

மறுநாள் காலை என்னை முகம் கழுவ அனுமதித்தனர்.காலை எட்டு மணி இருக்கும்.வெள்ளை நிற வானொன்றில் ஒரு உயரமான மனிதன் வந்திறங்கினான்.பொன் மாஸ்டரிடம் ஏதோ பேசினான். பின்னர் என்னைப் பார்த்து "வானில் ஏறி குப்புறப்படு"என உரத்த



தொனியில் கத்தினான்.
நான் வானிற்குள் ஏறினேன்.அங்கு என்னைப்போல் ஒருவனும் குப்புறப் படுத்திருந்தான்.
சுமார் 15 நிமிடப் பயணத்தின் பின்னர் வான் ஓர் அழகான மாடி வீட்டின் முன் நின்றது.கிட்டத்தட்ட 10 விசாலமான அறைகளைக் கொண்ட வீடு அது.அங்கு என்னை ஓர் அறைக்குள் விட்டுப்பூட்டினர்.ஏற்கனவே அதற்குள் 15 பேர் இருந்தனர்.

இரண்டுமணி நேரம் வரை யாரும் என்னுடன் பேசவில்லை. நான் மௌனத்தைக் கலைத்து "எப்போது கைது செய்யப்பட்டீர்கள்"என்று கேட்டேன்.கடந்த பத்து நாட்களுக்குள் கைது . செய்யப்பட்டதாகக் கூறினார்கள். நாம் எங்கு இருக்கிறோம் என்பது யாருக்குமே தெரிந்திருக்கவில்லை.
ஆனால் அடிக்கடி கோவில் மணியோசை கேட்டது.
நல்லூர் திருவிழா நேரம் அது.
எனவே நல்லூருக்குக் கிட்டடியில் ஏதாவது ஒரு இடமாயிருக்கலாம் என ஊகித்துக்கொண்டோம்.

மாலை 3 மணியிருக்கும்.துப்பாக்கி சகிதம் 15 வயது மதிக்கத்தக்க ஒரு புலி உறுப்பினன் எமது அறைக்குள் வந்தான். யாராவது மலசலம் கழிக்க வேண்டியிருக்கிறதா எனக் கேட்டான். யாராவது தப்பியோட முனைந்தால் தலை பறக்கும் என எச்சரித்துவிட்டு இருவர் இருவராக எம்மை வெளியே அழைத்துச் சென்று மலசலம் கழிக்க விட்டான்.

மாலை 5 மணியளவில் நான் இன்னோர் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு என்னை அழைத்து வந்த உயரமான மனிதன் இருந்தான்.

என்னைக் கண்டவுடன் ஆத்திரம் கொண்ட அவன் எனது வானை எங்கே வாங்கியதென்றும், வானின் சாரதி எங்கே என்றும் கத்தினான். எனது சாரதியைப் பற்றிய சகல விபரங்களையும் தருமாறு என்னை வற்புறுத்தினான். நான் எல்லாவற்றையும் கூறினேன். திடீரென்று ஒரு பெரிய பொல்லால் என்னைத் தாக்கத் தொடங்கினான். எங்களிடம் அகப்படாமல் இது வரைக்கும் எங்கு ஒளித்திருந்தாய் எனக் கூச்சலிட்டு என்னை அடித்தான். மீண்டும் பழைய அறைக்குள் என்னை அடைத்தான்.

www.tamilarangam.net

27 ஆம் திகதி காலை அதே உயரமான மனிதன் என்னிடம் வந்தான். எனது வானில் என்னை ஏற்றிக் கொண்டு குப்புறப் படுக்குமாறு கட்டளையிட்டான். சுமார் 15 நிமிடம் பயணத்தின் பின்னர் என்னை எழுப்பி எனது சாரதியின் இடத்தைக் காட்டுமாறு கேட்டான். நான் அவனுக்கு சாரதியின் வீட்டிற்கு வழி காட்டினேன். அச்சமயம் சாரதி வீட்டில் இருக்கவில்லை.

சாரதி வந்தவுடன் பொன்மாஸ்டரைப் போய் பார்க்கச் சொல்லுமாறு சாரதியின் குடும்பத்திற்கு உத்தரவிட்ட பின்னர் மீண்டும் வானில் ஏறினான்.வரும் வழியில் வேறெங்காவது சாரதி நிற்கக்கூடுமா என என்னிடம் கேட்டான். நான் அவரது சகோதரி வீட்டைக் காட்டினேன். அங்கும் அவர் இருக்கவில்லை. அதே உத்தரவுகளை சாரதியின் சகோதரிக்கும் பிறப்பித்துவிட்டு, மீண்டும் என்னை முந்திய இடத்திற்கு கொண்டுவந்து விட்டான்.

28 ஆம் திகதி எனது சாரதியை என்முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். என்னைக்கொண்டு அவரை அடையாளம் கண்டு கொண்டனர்.

29 ஆம் திகதி எம்மிருவரது கண்களும் கட்டப்பட்டன. நாம் வேறொரு பழைய வீடொன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அந்த வீட்டில் ஏறத்தாள 15 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட வயதுடைய பத்து இளைஞர்கள் இருந்தனர். அனைவரும் கைகளில் பெரிய பொல்லுகளுடன் நின்றனர். எமது பெயர் விபரங்கள் எடுக்கப்பட்டன. பின்னர் நாம் அறை யொன்றுள் அடைக்கப்பட்டோம். 10 அடி நீள அகலமுடைய அவ் வறையில் ஏற்கனவே 30 கைதிகள் இருந்தனர். ஒரு மாதத்திற்கு மேலும் 2 மாதத்திற்கு உட்பட்டுமுள்ள கால கட்டத்திலிருந்து அக் கைதிகள் அங்கிருப்பதாக அறிந்து கொண்டேன். எனக்குத் தெரிந்த அனைத்தையும் புலிகளிடம் சொல்லிவிட வேண்டுமெனவும் இல்லாவிடில் 'கசாப்புக் கடைக்கு' அனுப்பப்படுவேனென்றும்,அங்கு சென்றவர்கள் திரும்பியதற்கு சரித்திரமே இல்லையென்றும் கூறினார்கள்.

2 ஆம் திகதி காலை 11 மணி இருக்கும்."ஆரந்த ரெலோ வேசைமோன். R......"என்ற சத்தத்துடன் ஒருவன் கதவைத் திறந்தான். அவன் வாயில் என் பெயர் வந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.ஏனென்றால் வழமையாக என் பெயருக்குப் பதிலாக இலக்கம் ஒன்றைச் சொல்லியே கூப்பிடுவார்கள்.பெயர் சொல்லிக்



கூப்பிட்டவன்,என்னைக் கூட்டிக்கொண்டு போய் ஒரு தூணில் கட்டினான்.

எனது சாரதி அசைவற்று நிர்வாணமாக எனக்குப் பக்கத்தில் கிடந்தார். பொல்லால் அடித்த காயங்களால் அவர் உடல் முழுவதும் நிரம்பியிருந்தது. நான்கு இளைஞர்கள் கையில் பொல்லுடன் அங்கு நின்றனர் அவர்கள் நால்வரும் 15வயதிற்கு குறைந்தவர்களென நிச்சயமாக நான் கூறுவேன். சாரதி இறந்துவிட்டதாக என்னிடம் அவர்கள் கூறினர். அதன்பின் பொல்லுகளால் என்னை அடிக்கத்தொடங்கினர். யாரைக் கொலை செய்தாய்,எங்கு கொள்ளையடித்தாய், உனது ஆயுதங்களை எங்கே மறைத்து வைத்திருக்கிறாய் போன்ற கேள்விகளைக் கேட்டு என்னைத் தொடர்ந்து அடித்தனர். நான் இவ்வாறான எந்தச் செயல்களிலும் சம்பந்தப்படவில்லை, என்னை அடிக்காதீர்கள் எனக் கெஞ்சினேன். அது செவிடன் காதில் ஊதியசங்கானது. நான் சுயநினைவை இழக்கும் வரை என்னை அடித்துக் கொண்டேயிருந்தனர்.

மூன்றாம் தேதி காலை அவர்கள் மீண்டும் என்னை அறையிலிருந்து இழுத்துச் சென்றனர். சாரதி எல்லாவற்றையும் சொல்லிவிட்டான்.. நீ உண்மையைச் சொல்லாவிடில் உனக்கும் சாரதிக்குநேர்ந்த கதிதான் என்று கூறினர். எனது வாய்க்குள் பெரிய மரத்துண்டொன்றை ஒருவன் திணித்தான். மற்றவர்கள் பார்த்து சிரித்தனர். தொடர்ந்தும் பலத்த சித்திரவதை. எனது குடும்பம்,உறவினர் பற்றிய சகல விபரங்களையும்கேட்டு எழுதினர். ரெலொ அமைப்பைப் பற்றியசகல விபரங்களுமடங்கிய அறிக்கை ஒன்றை தயார் செய்து, அதில் எனது பங்களிப்பு பற்றியும் எழுதி 30 பக்க வாக்குமூலம் ஒன்றை தயார் செய்தனர். கௌதமன் எனும் பெயர் கொண்ட திருமலையைச் சேர்ந்த ஒருவன் எனது வாக்குமூலத்தை தயார் செய்தான்.

அந்த சிறையில் ஒரு நாளிற்கு இருமுறை மட்டும் மலசலம் கழிப்பதற்கு அறையிலிருந்து வெளியே கொண்டுவரப்படுவோம் மற்றைய நேரங்களில்15 வயதுக்குட்பட்ட பையன்களின் பொல்லடி எமக்கு தொடர்ந்து கிடைத்தது

10ம் தேதியன்று காலை சகல கைதிகளும் அறைக்கு வெளியே கொண்டுவரப்பட்டனர். கிட்டத்தட்ட 35 பேர் வரை இருக்கும் பத்துப்பேராக நாம் பிரிக்கப்பட்டோம். ஆறு உருக்கு உருளைகளைக் கொண்ட சங்கிலியால் 10 பேரை யும் ஒன்றாகக் கால்களில்

www.tamilarangam.net

கட்டினர். மாலை 3மணி அளவில் அனைவரும், நாம் முன்பிருந்த மாடி வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கு எமது கண்கள் கட்டப்பட்டன. ஒருவரின் சாரத்தை மற்றவர் பிடிக்குமாறு பணிக்கப்பட்டபின் ஒரு பெரிய வானில் ஏற்றப்பட்டோம். ஏறத்தாள இரண்டு மணி நேரப் பயணத்தின் பின்னர் வான் நின்றது நாம் இறங்குமாறு பணிக்கப்பட்டோம். "இந்தப்பன்றிகளெல்லாம் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றனவா?" என ஒருவன் உரத்தகுரலில் கேட்டதும் இன்னொருவன் ஆமோதித்ததும் எனக்கு கேட்டது . நாங்கள் இறங்கும் போது ஒவ்வொருவருக்கும் பச்சைக் கருக்குமட்டை அடி வழங்கப்பட்டு வரவேற்பு கிடைத்தது. நாம் அறைக்குள் செல்வதற்கு சில படிகள் ஏறவேண்டியிருந்தது. கண்கள் கட்டப்பட்ட நிலையில் தடுமாறினோம். ஆளை ஆள் பிடித்துக் கொண்டு ஏறுமாறு பணிக்கப்பட்டோம். அப்போதும் கூட பனைமட்டை அடியை அவர்கள் நிறுத்தவில்லை. சில புலி உறுப்பினர்கள் எமது நிலையைப் பார்த்து எக்காளமிட்டு சிரிப்பதை நாம் கேட்டோம். நாங்கள் வீட்டுக்குள் சென்றவுடன் எமது கண்களைத் திறந்து விட்டனர்.பின்னர் எம்மை வட்டமாக இருக்க உத்தரவிட்டு, 35 பேருக்குமாக இன்னொரு பெரிய சங்கிலி பொருத்தப்பட்டது. சிலமணி நேரங்களின் பின்னர் ஏறத்தாள 15அடி நீளம் 10அடி அகலமுடைய அறைக்குள் நாங்கள் தள்ளப்பட்டோம். காலையிலிருந்து உண்வருந்த எதுவும் தரப்படவில்லை.

11ம் திகதி காலை யாரோ வந்து எம்மைப் பிணைத்திருந்த பொதுவான சங்கிலியை அகற்றினர்கள். அதன் பின்னர் சுமார் 20 புலி உறுப்பினர்கள் ஒவ்வொருவராக எமது அறைக்குள் வந்தனர். எம்மை எந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் என விசாரித்தனர். எம்மை அடிப்பதற்கும் அவர்கள் தவறவில்லை. காலை 8மணி அளவில் நாம் காலைக் கடன்களை முடிப்பதற்கு இருவரிருவராக அழைத்துச் செல்லபட்டோம். அப்போது தான் அந்த முகாமின் கோரமுகம் எமக்குத்தெரியவந்தது.

முகாமின் அமைப்பு

ஆள் அரவமற்ற வெளியில் அமைந்துள்ள தென்னந்தோப்பு அது. அதற்குள் ஒரு பெரிய வீடு. ஏறத்தாள 30 அடி அகலமும்10 அடி நீளமும் 8'உயரமும் கொண்ட கூடாரம் ஒன்று அவ்வீட்டுடன் சேர்த்து அமைக்கப்பட்டிருந்தது. அந்தக்கூடாரம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அக்கூடாரத்தின் பக்கங்கள் நெருக்கமாகப் பின்னப்பட்ட கம்பி வலையால் அடைக்கப்பட்டிருந்தன. அதைச்சுற்றி சுருட்கம்பியாலான இன்னொரு



வேலியும் அதனைச்சுற்றி மீண்டும் நெருக்கமாக பின்னப்பட்ட கம்பி வேலியும் அடைக்கப்பட்டிருந்தன. அந்தக் கூடாரத்தின் வாசலில் பெரிய இரும்புக் கேற் ஆமைப்பூட்டால் பூட்டப்பட்டபடி. சாத்தியிருந்தது. அக் கூடாரக் கூரையின் சிலாகைகளில் நைலோன் கயிறுகளால் கைகள் பிணைக்கப்பட்டு,10 கைதிகள் தொங்கவிடப்பட்டிருந்தனர். அனைவரும் நிர்வாண கோலத்தில் அவர்களது கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன. அனைவரும் நீண்ட தாடி,தலைமயிருடன் காட்டு வேடர்கள் போல் காணப்பட்டனர். அது ஓர் மயிர்க்கூச்செறியும் காட்சி. எனது காலைக்கடன்கள் முடிந்தவுடன் நான் மீண்டும் வீட்டுக்குள் அழைத்துவரப்பட்டேன்.

என்னுடன் வந்த 35 பேரும் நானும் மாலை 5மணி போல் அக்கூடாரத்துள் அழைத்துச்செல்லப்பட்டோம். கிட்டத்தட்ட 10 அடி நீளம்,10 அடி அகலம் கொண்ட அதன் ஒரு பிரிவுக்குள் நாம் தள்ளப்பட்டு,கால்களுக்கு சங்கிலி பிணைக்கப்பட்டது.அதன் பின்பு, திரும்புவதற்கு கூட இடமிருக்கவில்லை.

அங்கு படுத்திருக்கும் போது, இரவில் யாராவது கதைத்தால் மறுநாட்காலை விசாரணை நடக்கும்.சில வேளையில் நாம் நித்திரையாய் இருக்கையில் சத்தமிட்டது யாரென தெரிய வராது. யாரும் ஒப்புக்கொள்ளாவிடில் எல்லோருக்கும் அடி விழும். யாராவது ஒப்புக்கொண்டால் அவரைச் சுடு வெய்யிலில் வெறும் உடலுடன் மணிக்கணக்கில் உருள விடுவார்கள். யாருக்காவது இரவில் வயிற்றோட்டம் போயிருந்தால் கூட, மறுநாட் காலை வரை அப்படியே படுக்க வேண்டியது தான்.

அந்த முகாமில் அடைபட்ட இரண்டாவது நாள் காலை 8மணி அளவில் 20 கதிரைகளையும் ஒரு மேசையையும் தூக்கி வருமாறு ஒரு கைதி பணிக்கப்பட்டார். 20 புலி உறுப்பினர்கள் அங்கு வந்து அமர்ந்தனர். அவர்கள் கைதிகளின் பெயர்களைக் கூப்பிட்டு விசாரிக்கத் தொடங்கினர். சில கைதிகளை நிலத்தில் படுக்க வைத்து முகத்தில் தண்ணீர் தொடர்ந்து இறைத்தனர். சிலர் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர். தங்களை சித்திரவதை செய்ய வேண்டாமென அக்கைதிகள் அவர்களிடம் கெஞ்சினர். தங்களுக்கு தெரிந்த கடவுள்களையெல்லாம் அழைத்து தங்களின் துயரங்களுக்கு விடிவு தரும்படி கதறினர். மற்றக்கைதிகள் கூரைச் சிலாகைகளில் கைகளில் நைலோன் கயிறு கட்டியபடி தொங்கிக்

www.tamilarangam.net

கொண்டிருந்தனர். அவர்களது கால் பெருவிரல் மட்டும் நிலத்தை மட்டுமட்டாக தொட்டுக்கொண்டிருந்தது. 11மணி வரையும் அரக்கத்தனமான சித்திரவதைகள் தொடர்ந்தன. மீண்டும் அனைவரும் கூடாரத்துள் அடைக்கப் பட்டோம். உப்பில்லாக் கஞ்சியும், பீற்றூட் அவித்த தண்ணியும் உணவாக தரப்பட்டன. மாலை ஐந்து மணிக்கு மீண்டும் எம்மைச் சங்கிலியால் பிணைத்தார்கள். மறுநாளும் இதே கதை தொடர்ந்தது. இந்த சித்திரவதைகளின் போது எம்மிடம் கேட்கப்பட்ட முக்கிய கேள்விகள்-

1.யாரைக் கற்பழித்தாய்?
2.கொள்ளைகள் எதிலாவது சம்பந்தப் பட்டிருக் கின்றாயா?.
3.எப்பவாவது இராணுவத்திற்கு தகவல் கொடுத்தாயா?.
4.உனது ஆயுதங்களை எங்கே மறைத்து வைத்திருக்கின்றாய்?.

இந்தக் குற்றச்சாட்டுகளில் ஒன்றையாவது நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

## தண்டனைகள்-

பச்சைக் கருக்கு மட்டையால் முதுகில் அடிப்பார்கள். அவர்களது சித்திரவதைகளைத் தொடர, உடலின் ஒருபகுதி கூட மிஞ்சியிராமல் புண்ணுயிருக்கும்; மருந்து போட்ட துணியால் எம்மை மூடிவிடுவார்கள்

7அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்ட சீமெந்தாலான சரிவான கட்டிலொன்றில் சங்கிலியொன்று நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கைதியும் கால் மேல் பக்கமாகவும்,தலை கீழ்ப்பக்கமாகவும் படுக்கவைக்கப்படுவான். கால்கள் சங்கிலியால் பிணைக்கப்படும். யேசுகிறிஸ்து சிலுவையில் இருப்பது போன்ற உருவமே எனது நினைவுக்கு வரும். கைதியின் நெஞ்சு பெல்ற் ஒன்றினுல் கட்டப்படும். தலையைத்தவிர உடலின் வேறொரு பகுதியையும் அசைக்க முடியாது. பின்னர் கைதியின் முகத்தைத் தடிப்பான துவாய் ஒன்றினுல் மூடுவார்கள். புலி அங்கத்தவன் ஒருவன் துவாயின் இரு பக்கங்களையும் தனது கால்களால் நன்கு மிதித்தபடி நின்று கொண்டு, முகத்தில் தண்ணீரை இறைப்பான். மூச்சுத்திணறி கைதி வீரிட்டுக் கத்துவான். உண்மையைச் சொல்லுமாறும்,தாங்கள் அவன்மேல் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொள்ளுமாறும் வற்புறுத்துவார்கள். யாராவது பிடிவாதமாயிருப்பின் 10 வாளி தண்ணீர் வரை ஊற்றப்படும்.



கைதியை அக்கட்டிலில் படுக்கவைத்தபடி இரும்புச்சட்டம் உட்செலுத்தப்பட்ட பெரிய மரக்குற்றி ஒன்றுல் தலையிலிருந்து கால்வரை உருட்டுவார்கள். (மரக்குற்றியின் நிறை 300ரு இருக்கும்) அப்போது எலும்புகள் உடையும்;தோல் உரிபடும். இன்னொரு குறுகிய அறை; காற்றோட்டமற்ற இருட்டறை; இந்த அறைக்குள் நிர்வாணமாக கைதி தள்ளப்படுவான். பின்னர் மிளகாய் புகையை அந்த அறைக்குள் செலுத்துவார்கள். பதில் கிடைக்காத வரை இது நிகழும். கைதி இருமத்தொடங்கி சில சமயம் இரத்தம் கக்குவான். இதை விட வேறு வகையான சித்திரவதைகள் தாராளம்.

இந்த வதைமுகாமில் பலநாட்கள் நாங்கள் சித்திரவதைப்பட்டோம். 1.9.90 காலை 11மணி இருக்கும். விமானங்கள் குண்டு வீசுவதை நாங்கள் கேட்டோம். விமானங்களோ,கெலிகொப்டர்களோ வரும் சத்தம் கேட்டவுடன் சிறைக்கதவைப் பூட்டுவதே புலிகளின் முதல் வேலையாயிருக்கும். அன்றும் அவ்வாறே செய்தனர் சிறிது நேரம் கழித்து, எமது முகாமுக்கருகே ஒரு குண்டு வீழ்ந்தது. நாங்கள் உதவி கேட்டுக் கதறி கதவை திறக்குமாறு கூவினோம். ஆனுல் எம்மைக் காவல் புரிந்த புலிகள் அனைவரும் 300 யாருக்கப்பால் சென்றுவிட்டனர்.சிலநிமிடங்களின் பின்னர் இன்னொரு குண்டு வீட்டின் மேல் விழுந்து சுவர் நொருங்கியது. மூன்ருவது குண்டு எமது கூடாரத்தின் மேல் விழுந்தது. நான் வெளியே தூக்கி வீசப்பட்டேன் அச்சமயத்தில் எல்லாமாக 152 கைதிகள் அங்கு இருந்தனர். இந்தக் குண்டு வீச்சின் போது 70 பேர் மட்டுமே தப்பினோம். அதில் 17 பேர் மோசமான காயங்களுக்குள்ளாகி இருந்தனர். நாங்கள் விமானத்தாக்குதல்களுக்கு பயந்து ஓட முற்பட்டோம். நாங்கள் தப்பியோட முயற்சிப்பதாகக் கூறி, புலிகள் எங்களை மீண்டும் கைது செய்து 100 யார்களுக்கப்பாலுள்ள பனை மரங்களில் எங்களை கட்டினர். சிறிது நேரத்தின் பின்னர் வெடிச்சத்தங்கள் கேட்டன. காயம்பட்டு ஓட முடியாதவர்களும் சிறைக்கருகே விழுந்து கிடந்தவர்களும் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனப் பின்னர் அறிந்து கொண்டோம். இரவு 11 மணி அளவில் டிராக்டர் ஒன்று அங்கு வந்து நின்றது. எங்களில் 16 பேர் இரத்தப் பெருக்கால் நினைவிழந்திருந்தனர். அவர்களை அந்த டிராக்டர் ஏற்றிச் சென்றது. நள்ளிரவு 1 மணியிருக்கும் இரண்டு டிராக்டர்கள் வந்தன. மீதி 54 பேரும் அந்த இரண்டு டிராக்டர்களிலும் கண்கள் கட்டப்பட்ட பின் ஏற்றப்பட்டோம். சுமார் 24 மைல்களுக்கப்பால் நாம் இறக்கப்பட்டோம்.

www.tamilarangam.net

மறுநாள் காலை இன்னும் 70 கைதிகளை அங்கு கண்டோம். அதில் 45 பேர் சிங்கள பொலிசார். காலை 10 மணியிருக்கும். எங்களை நல்ல இடமொன்றிற்கு மாற்றப் போவதாக ஒருவன் வந்து சொன்னான். எங்கள் கண்கள் கட்டப்பட்டு ஒரு மூடிய லொறிக்குள் ஏற்றப்பட்டோம். நாங்கள் ஒரு மணித்தியாலம் பயணம் செய்திருப்போம். மூடிய லொறியும், ஆள் நெருக்கமும் சேர்ந்து வியர்வையால் முழுக்க நனைந்துவிட்டோம். லொறி ஒரு வீட்டின் முன் நின்றது. வீட்டுக்குள் நாங்கள் கொண்டு செல்லப்பட்டோம். வீட்டின் வாசலில் இரும்புக்கதவொன்றிருந்தது. சதுர அமைப்பைக் கொண்ட அவ் வீட்டில் இரு பெரிய அறைகள். 14 சிறிய அறைகள். பெரிய அறைகள் ஏறத்தாள 10அடி நீள அகலம் உடையவை. சிறிய அறைகள் சுமார 7 அடி நீளம் 2 அடி அகலம் உடையவை.சிறிய அறைகளில் 2 அடி நீள அகலப் பகுதி கழிவறைப் பகுதிக்கு ஒதுக்கப் பட்டிருந்தது. அவை இருட்டறைகள்.காலை 10 மணியிலிருந்து மாலை 3 மணிவரை மெல்லிய ஒளிக்கீறல்கள் ஊடுருவும். அவ்வளவுதான். அங்கிருந்த கைதிகள் மாதக்கணக்காக பூட்டிய அறைக்குள் இருந்தனர். அவர்களது தாடியும் ,தலைமுடியும் நீண்டு தொங்கியது. தலைமுழுக்கப் பேன்பிடித்து , தலைப் புண்ணால் வருந்தினார்கள். அவர்களுக்கு எவ்வித வைத்தியமும் செய்யப்படவில்லை. இதனால் அந்த அறைகள் சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசின.

ஒவ்வொருநாள் மாலையும் கஞ்சி தரப்படும். இதுதான் எங்களது ஒருவேளை உணவு. இவ்வாறுதான் நாங்கள் வாழ்ந்தோம். சனநாயக நாடொன்றில் இப்படி ஒரு வாழ்வை யாரும் கற்பனை கூட செய்திருக்க முடியாது. யாரும் உணவு கேட்டுக் கெஞ்சினால் அடிதான் கிடைக்கும். மூன்று மாதகால துயரவாழ்க்கையின் பின் டிசம்பர் மாதம் வேறிடத்திற்கு மாற்றப் பட்டோம். அங்கு எமது சங்கிலிகள் அகற்றப்பட்டன. கடின உடலுழைப்பு வழங்க நாம் புலிகளால் நிர்ப்பந்திக்கப் பட்டோம். ஏறத்தாள 500 கைதிகள் தண்டவாளங்க்ள்,சிலிப்பர்கட்டைகள் அகற்றுவதிலும் கல்லுடைப்பதிலும் இரவு பகலாக ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். எமக்கு மாதம் ஒரு சோப் தரப்பட்டது. 150 பேருக்கு 1 கிலோ பருப்பு என்ற வீதத்தில் வைக்கப்பட்ட குழம்புடன் வெள்ளைச் சோறு தரப்பட்டது. தப்ப முயன்றவர்கள் பிடிக்கப்பட்டு நிரந்தரமாக முடமாக்கப்பட்டனர் இந்தக் கொடிய வாழ்க்கையை வாழ்வதைவிட சாவதுமேல் அல்லது தப்ப முயல்வது என முடிவு செய்தேன். நான்கு மாதகால கடினவாழ்க்கையின் பின் ஒருவாறு தப்பி ஓடி வந்தேன்.
(இது புலிகளால் பிடிக்கப்பட்ட ஒரு கைதியின் சொந்த அனுபவம்.அவரது குடும்பத்தின் பாதுகாப்பு கருதி பெயர்களையும் சில தகவல்களையும் மறைத்துள்ளோம்.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்